**O.S.No. 3/2015**

Date : 19.09.2019

வாசா. 2 திரு.பன்னீர்செல்வம்

***சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -***

இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு வாதி ரேவதி தான் என்னை அழைத்தார். ராஜேஸ்வரி என்பவர் எனது அத்தை ஆகும். அவரது சொந்த சில்லமரத்துப்பட்டி ஆகும். ராஜேஸ்வரியின் கணவர் பெயர் சிவசாமி ஆகும். அவருடைய சொந்த ஊர் குப்பையன்பட்டி. சிவசாமியுடன் பிறந்தவர்கள் 4 பேர்கள் ஆகும். சிவசாமி உட்பட அனைவரும் காலமாகிவிட்டார்கள். நான் சில்லமரத்துப்பட்டிக்கு அடிக்கடி சென்று வருவேன். தாவா சொத்தின் சர்வே எண் பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து காலியிடமாக கிரையம் பெறப்பட்டு, பின்னர் வீடு கட்டப்பட்டது. யாரிடமிருந்து கிரையம் பெற்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. கிரையம் பெற்றபொழுது என்னிடம் எதுவும் கலந்து ஆலோசிக்கவில்லை. அதேபோன்று அந்த இடத்தில் வீடு கட்டும் போதும் என்னிடம் எதுவும் கலந்து ஆலோசிக்கவில்லை. ராஜேஸ்வரி-சிவசாமி ஏதாவது ஆவணம் ஏற்படுத்தினால், என்னிடம் எதுவும் கலந்து ஆலோசிப்பார்களா என்றால், அவ்வாறு ஆலோசிக்கமாட்டார்கள். உயில் எழுதும்பொழுது என்னை கலந்து ஆலோசிக்கவேண்டிய அவசியம் எதுவுமில்லை என்றால் சரிதான். உயிலை நான் பார்க்கவில்லை. உயிலை பார்க்காதபொழுது, அது மோசடியானது என்று எதன் அடிப்படையில் நான் கூறுகிறேன் என்றால், ராஜேஸ்வரி அம்மாள் மனநிலை சரியில்லாமல் இருந்தார். அதனால் அவர் எந்த ஆவணத்தையும் ஏற்படுத்தியிருக்க வாய்ப்பில்லை என்பதால், உயில் மோசடியானது என்று கூறுகிறேன். எனது முதல் விசாரணையில் ராஜேஸ்வரி அம்மாள் மனநிலை சரியில்லாமல் இருந்தார் என்ற விபரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் இந்த தாவா தாக்கல்

செய்த பின்னிட்டு தான் உயில் மோசடியாக தயாரிக்கப்பட்டதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். ராஜேஸ்வரியின் கையெழுத்து எனக்கு தெரியாது. உயிலை பார்க்காதபோதும், ராஜேஸ்வரியின் கையொப்பம் எனக்கு தெரியாதுபோதும், எதனடிப்படையில் தாவாவிற்கு பின்னிட்டு பதிவு செய்யப்படாத மோசடியான ஒரு உயிலை தயாரித்தார்கள் என்று நான் கூறுகிறேன் என்றால், ராஜேஸ்வரிக்கு மனநிலை சரியில்லாமல் இருந்த காரணத்தினால் நான் அவ்வாறு கூறுகிறேன். சிவசாமி நல்ல மனநிலையில் தான் இருந்தார். நான் சில்லமரத்துப்பட்டிக்கு செல்லும்பொழுது ராஜேஸ்வரியிடம் பேசுவேன். என்னிடம் பேசும்பொழுது அவர் நல்ல மனநிலையுடன் தான் பேசுவார். அவரிடம் நான் பேசியபொழுது சொத்து விபரத்தை பற்றி நான் எதுவும் பேசியதில்லை. அவரும் என்னிடம் சொத்து விபரத்தை பற்றி பேசியதில்லை. ரேவதியின் கணவருக்கு நான் தாய்மாமன் என்று சொன்னால் சரிதான். வாதி எனக்கு மிகவும் வேண்டப்பட்டவர் என்பதால், அவரது வழக்கிற்கு ஆதரவாக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எந்த ஆவணத்தை ஏற்படுத்தினாலும் என்னிடம் கேட்கவேண்டிய அவசியம் இல்லாதபொழுது, தாவாவில் தாக்கல் செய்யப்பட்ட உயில் மோசடியானது என்று கூறுவதற்கு எனக்கு அருகதை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**முதல் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை 2 மற்றும் 3ஆம் பிரதிவாதிகள் தரப்பின் குறுக்கு விசாரணையாகவும் முற்றிலுமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

Sd./ G. Vijaya
முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.